SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆர்க்காடு ஜில்லாவிலே, 1957-ம் ஆண்டிலே பிறந்த குழந்தைகள் 98,000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் கால் பாகத்திற்கு மேல் இறந்து போயிருக்கிறது. மற்ற ஜில்லாகளைவிட இந்த ஜில்லாவில் மட்டும் இவ்வளவு குழந்தைகள் இறப்பதற்கு காரணம் என்ன ? அங்குள்ள பொருளாதார நிலைமையோ, அல்லது வறண்ட பிரதேசமாக இருப்பதோ—வட ஆர்க்காடு ஜில்லா உண்மையிலே ஒரு வறண்ட பிரதேசம்—காரணமா ? அல்லது அந்த ஜில்லாவில் சுகாதாரம் போன்ற விஷயத்தில் போதிய கவனம் செலுத்தப்படாததால் இவ்வளவு அதிகப்படியாக குழந்தைகள் இறந்திருக்கின்றனவா ? ஆகவே இதில் போதுமான கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை விஞ்ஞான முறையில் தான் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

SRI K. VINAYAKAM : From the statement placed on the table of the House it is evident that the powers of procreation are greater in North Arcot district (laughter) from which the Hon. Minister hails. Even from the Coimbatore district from which the Hon. the Finance Minister hails it is also the same. Am I to understand, Sir, that in spite of the great propaganda carried on for family planning, about which our Hon. Minister seems to be a fad, the powers of procreation in that district has not decreased.

MR. SPEAKER : The question is out of order.

### *Soil Conservation*

* 226 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of trained personnel in the State in soil conservation work ; and

(b) the number of persons deputed by the State in 1957–58 to undergo training in soil conservation work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 71.

(b) 27.

### *Madras City Tenants' Protection Act*

* 227 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் எத்தனை நகராட்சிகளில் சென்னை நகர பகுதி மனை குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது ?

(ஆ) மேற்படி சட்டத்தை துரிதமாக்குவதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The Madras City Tenants' Protection Act, 1921, has been extended to the Municipalities of Kumbakonam, Tanjore, Mayuram and Nagapattinam.

13th September 1958]

As no cases of lease of vacant sites or rack-renting or of forceful and hasty evictions were brought to the notice of the Government, the Government considered it not necessary to extend the Act to Tiruvarur and Mannargudi Municipalities.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் திருவாரூர் மன்னார்குடி முனிசிபாலிட்டிகளிலிருந்து மனுக்கள் வந்து, அவசியமில்லை என்று சொன்னது சரியா? இனிமேலாவது "ஷிடி டெனன்ட்ஸ் ப்ரொடெக்‌ஷன் ஆக்ட்"-ஐ எல்லா முனிசிபாலிட்டிகளிலும் அமுல் நடத்த வேண்டிய வேலைகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் சொன்ன அளவிலே சரிதான். ஏனென்றால், அங்கு இம்மாதிரியாக பலாத்காரமாக வெளியேற்றுவது பற்றிய ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வரவில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அமைச்சர் அவர்கள் சொல்லிய நகரங்களில் இருந்து இதுவரையில் எத்தனை மனுக்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? திருவாரூர் சம்பந்தப்பட்ட வரையில் மனுக்கள் வந்த பிறகு இன்னும் ஏன் கவனிக்கவில்லை என்பதற்கு ஏதாவது காரணம் சொல்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்டத்தின் கருத்து முக்கியமாக சென்னைக்கும், பிற்பாடு, மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்பது. ஆனால், மற்ற இடங்களில் இம்மாதிரியான சூழ்நிலை ஏற்பட்டால், பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படலாம். அந்த வகையில் இந்த ஊர்களுக்கு அவசியமில்லை என்ற தகவல் கிடைத்ததால், இது விஸ்தரிக்கப்படவில்லை.

**SRI T. S. RAMASWAMY PILLAI : When do the Government propose to extend the provisions of this Act to the Kanyakumari District ?**

**THE HON. SRI M. A. MANICKAVELU : I believe the Act will cover that area also. If the situation warrants, it can also be extended to that area.**

### *Christian Religious Institutions.*

*228 *Q.*—SRI P. G. MANICKAM : உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கிறிஸ்தவ மத ஸ்தாபனங்களையும், அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வரும் பிரச்னை சென்னை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறதா?

(ஆ) அவ்வாறு ஆலோசனையிலிருப்பின் அவைகளின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆலோசனைகளை பக்கத்து ராஜ்ய சர்க்கார் நம் சர்க்காரைக் கேட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.